ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல: PS/EPC/MA02/paddy

2020 சனவரி மாதம் ஆந் திகதி

சகல மாவட்டச் செயலாளர்களுக்கும்

**<u>2019/20 பெரும்போகத்தின்போது நெல் அறுவடைகளைக் கொள்வனவு செய்யும் துரித வேலைத்திட்டம்</u>**

மேற்போந்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட PS/EPC/Circular06/2020 Mk; இலக்க மற்றும் 2020.01.24 ஆந் திகதிய சுற்றுநிருபத்துடன் தொடர்பானது.

02. மேற்படி வேலைத்திட்டத்தின்கீழ் ஈரலிப்புத்தன்மை 14% ஐ விஞ்சுகின்ற அத்துடன் 22% இற்குக் குறைந்த நெல்லைக் கொள்வனவுசெய்து உலரவைக்கும் செயற்பாட்டின் போது ஈரலிப்பான நெல் இருப்புகளில் 100 கிலோகிராம்களுக்கு 10-15 இற்கு இடைப்பட்ட கிலோகிராம்கள் குறைவடைக்கூடுமென ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும்போது அதனை கருத்திற்கொண்டு செயற்படுமாறு தெரியப்படுத்துகின்றேன்.

03. மேலும் நெல்லினை உலர்த்துதல் மற்றும் இருப்புக்களை நடாத்திச் செல்லும்போது அச்செயற்பாடுகளை மிகவும் சரியாகவும் திறன்மிக்கதாகவும் செயற்படுத்துவதற்குரிய நிருவாக செயற்பாடுகளுக்காக மேற்போந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்கீழ் செயற்படுவதற்காக அனுமதி வழங்குகிறேன்.

04. அதன்வண்ணம் இது தொடர்பாக தங்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றி எனக்கு அறியத்தருமாறு மேலும் கேட்டுக் கொள்கின்றேன்.

ஒப்பம் : பி.பீ.ஜயசுந்தர
சனாதிபதியின் செயலாளர்

பி.டி. இந்திக்க எல்.விஜேகுணவர்த்தன
பணிப்பாளர் நாயகம்
பொருளாதார கொள்கை மற்றும் அபிவிருத்தி இணைப்பாளர்